**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,** சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் நாள் வியாழக்கிழமை

**E.A.No.4/2025 in E.A.No.3/2024 in E.A.No.53/2017**

**in**

**E.P.24/2016**

in

**O.S.No.54/2006**

அய்யன் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பாலுப்பிள்ளை (இறப்பு) ....1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி
2. கோமதி (இறப்பு) ....2ம் எதிர்மனுதாரர்/உத்தேச 2ம் பிரதிவாதி இறந்துபோன பிரதிவாதியின் வாரிசு
3. சங்கரநாராயணன் ....3ம் எதிர்மனுதாரர்/உத்தேச 3ம் பிரதிவாதி இறந்துபோன 2ம் எதிர்மனுதாரரின் வாரிசு

இம்மனுவானது 16.09.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சங்கரநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.ராஜாசிங் அவர்கள் ஆஜராகியும், இம்மனுவிற்கு No Counter allowed and terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.18 17:52:50 +0530

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 106–ன் கீழ், E.A.03/2024 ல் 18.07.2025 ல் பிறந்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணை நடத்த உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

நிறைவேற்றுதல் மனுவானது எதிர்மனுதாரரிடமிருந்து சுவாதீனம் வேண்டி தாக்கல் செய்து நிலுவையில் இருந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் இறந்துபோனார் என்றும், அவருக்கு வாரிசு சேர்க்க வேண்டிய மனு அனுமதிக்கக்கோரி சீர்திருத்தம் செய்ய வேண்டி Or 6 R 17 சி.பி.சி–ன்படி மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது நிலுவையில் இருந்த காலத்தில் மனுதாரரின் வழக்கறிஞர் இறந்துபோய்விட்டார் என்றும், அதன்பின்பு மனுதாரர் என்ன செய்வதென்று தெரியாது இருந்த காலத்தில் மனுதாரர் வழக்கறிஞர் சகோதரர் சந்தானம் என்பவரை சந்தித்து வழக்கில் கோப்புகளை பெற்று 18.07.2025 ல் மனுதாரர் கொடுத்ததாகவும், அப்பொழுதுதான் E.A.No.3/2024 மனு விசாரணை செய்யாமல் மனுதாரர் தரப்பு அழைக்கபட்டும் தள்ளுபடி ஆன விபரம் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், மேற்படி தவறுதல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், அது தெய்வாதீனமான தவறுதல் என்றும், E.A.No.3/2024 மனுவினை விசாரணை செய்து அனுமதிப்பதின் மூலம் மட்டுமே மனுதாரருக்கு தொடர்ந்து மேல்நடத்த முடியும் என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடியதாய் இருக்கிறது என்றும், மேலும் இந்த வழக்கினை தொடர்ந்து நடத்த முழு ஒத்துழைப்பு தரவும் தயாராக இருப்பதாகவும், ஆகையால் E.A.03/2024 ல் 18.07.2025 ல் பிறந்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணை நடத்த உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவின் 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு No Counter allowed and terms என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.18 17:52:59 +0530

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) இம்மனுவானது மனுதாரர் தரப்பில் E.A.03/2024 ல் 18.07.2025 ல் பிறந்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணை நடத்த உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

6) இம்மனுவின் மனுதாரர் தரப்பில் இவ்வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் இறந்துபோனார் என்றும், அவருக்கு வாரிசு சேர்க்க வேண்டிய மனு அனுமதிக்கக்கோரி சீர்திருத்தம் செய்ய வேண்டி Or 6 R 17 சி.பி.சி–ன்படி மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது நிலுவையில் இருந்த காலத்தில் மனுதாரரின் வழக்கறிஞர் இறந்துபோய்விட்டார் என்றும், அதன்பின்பு மனுதாரர் என்ன செய்வதென்று தெரியாது இருந்த காலத்தில் மனுதாரர் வழக்கறிஞர் சகோதரர் சந்தானம் என்பவரை சந்தித்து வழக்கில் கோப்புகளை பெற்று 18.07.2025 ல் மனுதாரர் கொடுத்ததாகவும், அப்பொழுதுதான் E.A.No.3/2024 மனு விசாரணை செய்யாமல் மனுதாரர் தரப்பு அழைக்கபட்டும் தள்ளுபடி ஆன விபரம் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் தரப்பில் மேற்படி காரணத்தை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இருப்பினும், E.A.No.3/2024–ன் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு E.A.No.3/2024 ல் பிறப்பித்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து உத்தரவிடுவது அவசியம் என்பதாலும், மேலும், 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு No Counter allowed and terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள காரணத்தினாலும், மேலும் மனுதாரர் இம்மனுவை விரைந்து தாக்கல் செய்துள்ள காரணத்தினாலும், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.18 17:53:07 +0530

8) <u>**இறுதியாக:-**</u>

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.18 17:53:15 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**</u> - இல்லை -

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.18 17:53:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.No.4/2025 in
E.A.No.3/2024 in
E.A.No.53/2017 in
E.P.24/2016 in
O.S.No.54/2006
உத்தரவு (Draft / Fair)

நாள் : 18.09.2025